# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 14,879/10 — 1969 නොවැම්බර් 23 වැනි ඉරිදා — 1969.11.23

14,879/10 ம் இலக்கம் — 1969 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 23 ந் திகதி ஞாயிற்றுக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

### சுங்க அறிவித்தல் இல. 61/9/417

(250 ஆம் அத்தியாயமான) அரசிறைப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் இடப்பட்டதும் 1961 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ஆம் தேதிய 12,781 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் பிரசுரிக்கப்பட்டு 14.3.1962 அன்று பிரதிநிதிகள் சபையினால் உறுதிப்படுத்தப்பட்டதுமான கட்டளையின்படி 24.11.1969 திங்கட்கிழமையன்று தொடங்கும் வாரத்தில், ஆர். எஸ். எஸ். தரம் 1 இறப்பருக்கான மதிப்பிடப்பட்ட எவ். ஓ. பீ. பெறுமதியும் ஏதேனும் விவரணத்தையுடைய இறப்பருக்கான ஏற்றுமதித் தீர்வை வீதமும் பின்வருவனவாகும்.

சுங்கக் கட்டளைச் சட்டம் தவிர்ந்த ஏதேனும் எழுத்துமூலமான நியாயப் பிரமாணத்தின் கீழ் ஏதேனும் விவரணத்தையுடைய இறப்பருக்குச் செலுத்தப்படவேண்டிய தீர்வைகளுடன் இத்தீர்வை மேலதிகமானதாக இருக்கும்.

| இறப்பர் | ரூ. ச |
|---|---|
| ஒவ்வொரு இருத்தல் ஆர். எஸ். எஸ். தரம் 1 இறப்பருக்கும் எவ். ஓ. பீ. மதிப்பீட்டுப் பெறுமதி .. .. .. .. | 1 21 |
| ஏதேனும் விவரணத்தையுடைய ஒவ்வொரு இருத்தல் இறப்பருக்கும் ஏற்றுமதித் தீர்வை .. .. .. .. | 0 14 |

எனது இல. ஏ. 781,
கா. ம. சுங்கம்,
கொழும்பு,
1969 ம் ஆண்டு நவெம்பர் மீ 23 ந் உ.

ஜீ. எச். டி வோஸ்,
முதன்மைச் சுங்கச் சேகரிப்பாளருக்காக.

11–288

---

### சுங்க அறிவித்தல் இல. 67/3/105

1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க அரசிறைப் பாதுகாப்புச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினகீழ இடப்பட்டதும், 1967 ஆம் ஆண்டு நொவம்பர் மாதம் 22 ஆம் தேதிய 14,776/17 ம் இலக்க அதிவிசேட கசெற்றில் பிரசுரிக்கப்பட்டு 1968.2.22 அன்று பிரதிநிதிகள் சபையினால் உறுதிப்படுத்தப்பட்டதுமான கட்டளையை ஏற்புடையதாக்கும் நோக்கத்துக்கென இலண்டன் சந்தையிலுள்ள பிலிப்பீன் கொப்பறுவுக்கான மதிப்பீட்டு கொ.கா.கே. விலை 1969.11.24 திங்கட்கிழமையன்று தொடங்கும் வாரத்துக்கு, ரூபா 1,312.69 ஆகுமென இத்தால் அறிவித்தல் செய்யப்படுகிறது.

2. கொப்பறு, தேங்காயெண்ணெய், தேங்காய்த் துருவல், உடன் தேங்காய்கள் ஆகியவைக்காகச் செலுத்தப்படவேண்டிய ஏற்றுமதித் தீர்வைகள் பின்வருமாறு :—

| ஒவ்வொரு தொன் கொப்பறுவுக்குமான ஏற்றுமதித் தீர்வை | ஒவ்வொரு தொன் தேங்காயெண்ணெய்க்குமான ஏற்றுமதித் தீர்வை | ஒவ்வொரு தொன் தேங்காய்த் துருவலுக்குமான ஏற்றுமதித் தீர்வை | ஒவ்வொரு 1,000 தேங்காய்க்குமான ஏற்றுமதித் தீர்வை |
|---|---|---|---|
| ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 422 69 .. | 500 00 .. | 424 61 ... | 105 67 |

3. சுங்கச் சட்டம் தவிர்ந்த வேறு ஏதேனும் எழுத்து மூலமான நியாயப் பிரமாணத்தின் கீழ் அத்தகைய தென்னம் பொருட்களுக்குச் செலுத்தப்படவேண்டிய தீர்வைகளுடன் மேலதிகமாக இத்தீர்வைகள் இருக்கும்.

எனது இல. 744/22, கா. ம. சுங்கம்,
கொழும்பு,
1969 ம் ஆண்டு நவெம்பர் மீ 23 ந் உ.

ஜீ. எச். டி வோஸ்,
முதன்மைச் சுங்கச் சேகரிப்பாளருக்காக.

11–289


இலங்கை அரசாங்க அச்சகப் பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது.